**C.C.No. 59/2021** **24.07.2025**

**PW1** -ராஜேந்திரன் , த/பெ. கருப்பையா

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரி அழித்ததாக சொல்லப்படும் வாய்க்கால் அரசாங்கம் பராமரிக்கும் வாய்க்கால் என்றால் சரிதான். அந்த வாய்க்காலுக்கு தனியாக சர்வே எண் உள்ளது, அதற்கான வரைபடத்தை எடுத்து பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். எதிரி வாய்க்காலை சேதப்படுத்தியதாக பொதுபணித்துறைக்கு எந்த புகாரும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த புகாருக்கு பொதுபணித்துறையினர் வாய்க்காலை அளந்தார்களா என்றால் வந்து பார்த்துவிட்டு சென்றுவிட்டார்கள். நான் சொல்வதுபோல் அங்கு வாய்க்காலே இல்லை, அவ்வாறு வாய்க்கால் இருந்திருந்தல் பொதுபணித்துறையே நடவடிக்கை எடுத்திருந்திரூப்பார்கள், நான் எதிரிகளின் பட்டா இடத்தில் உள்ள அவர்களது பாசனத்திற்கு செல்ல கூடிய வாய்க்காலில் உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. எனது மோட்டர் கேணியின் வடபுறமும், கிழக்குபுறமும் எதிரியின் இடம் உள்ளது என்றால் சரிதான்.

2) நான் எனது வயலில் கேணியை வெட்டிய மண்ணை எந்த திசையில் கொட்டியுள்ளேன் என்றால் தென்புறத்தில் கொட்டியுள்ளேன். அந்த மண்ணை கொட்டிய இடத்திற்கு பக்கத்து இடம் எதிரியின் இடம் என்றால் சரிதான். நான் கொட்டிய மண் சுமார் 10லிருந்து 15 அடி இருக்கும் என்றால் சரிதான். அந்த 15 அடி மண் சரிந்து, சரிந்து எதிரியின் இடத்தில் விழுந்துவிட்டது என்றால் சரியல்ல, கல்லை வைத்து கட்டியுள்ளேன். அந்த மண் சரிந்து, சரிந்து 13 அகலத்திற்கும், 100 அடி நீளத்திற்கும் மண்ணின் மூலமாக எதிரியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதுவரை நானோ, மற்ற

பாசனதாரர்களோ சர்வேயருக்கு பணம் கட்டி அளவை பணி செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே வாய்க்கால் இருந்திருந்தால் சர்வேயருக்கு பணம் கட்டி அளந்திருப்பேன், நான் எதிரியின் ஆக்கிரமிப்பு செய்திருந்ததால் சர்வே அளந்தால் தெரிந்துவிடும் என்று அளக்கவில்லை என்றால் சரியல்ல.

3) நான் நிலம் வாங்கிய காலத்திலிருந்து இன்று வரை எதிரியின் பட்டா இடத்தில் பாதையாக வைத்து பயணித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் XL இருசக்கர வாகனம் வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தில்தான் தினம்தோறும பயணிப்பேன் என்றால் சரிதான். எனது மகன் வெங்கடேசன் இன்று வரை மதுபழக்கத்திலிருந்து மீளவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை என்றால் சில சமயம் குடிப்பேன். எனக்கும், எனது மகன் வெங்கடேஷ்க்கும் மது அருந்திவிட்டு சண்டை ஏற்படும் என்றால் இல்லை. எனது புகாரில் சொல்லப்பட்டுள்ள JCB என்ன நிற வாகனம் என்றால் மஞ்சள் கலர். அந்த JCB எத்தனை மணிக்கு எங்கள் ஊருக்கு வந்தது என்றால் காலை 07.00 மணிக்கு வந்தது, அந்த JCB காலையிலிருந்து எத்தனை மணி நேரம் வரை எதிரியின் வயலில் வேலை செய்தது என்றால் எதிரியிடம்தான் கேட்கவேண்டும் எனக்கு தெரியாது. எந்த வயலில் JCB யை வைத்து வேலை ஆரம்பித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது,

4) நான் சென்று பார்த்தபோது JCB வேலை பார்த்துகொண்டிருந்ததா அல்லது சென்றுவிட்டதா என்றால் நான் பார்க்கும்போது வண்டி சென்றுவிட்டது. அவ்வாறு JCB சென்றபோது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 07.30 மணி இருக்கும். அந்த JCB எதிரியின் வயலில் அன்று முழுவதும் வேலை செய்து மாலை 05.00 மணிக்கு சென்றது

என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லும் புகாரின்படி எதிரி வாய்க்காலில் எந்த திசையில்JCB யை வைத்து வேலையை ஆரம்பித்தார்கள் என்றால் வடக்கிலிருந்து தென்புறம் சென்றார்கள். அவ்வாறு கண்மாயில் வடபுறத்திலிருந்து ஆரம்பித்து எங்கு வரை சென்றார்கள் என்றால் என் வயல் வரை. JCB கண்மாய் வாய்க்காலிலிருந்து அழித்து என் வயல் வருவதற்கு எவ்வளவு காலம் ஏற்படும் என்றால் 1/2 மணி நேரம் ஆகும். அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 07.30 மணியிலிருந்து 08.00 மணிக்குள் இருக்கும்.

5) எனது வயலில் எதிரி என்ன சேதப்படுத்தினார்கள் என்றால் எனது வயலிலில் இருந்த தென்னை மரத்தை பிடுங்கிவிட்டார்கள். அதன்பின் என்ன செய்தார்கள் என்றால் எதிரி கிளம்பி சென்றுவிட்டார்கள். நான் சொல்வதுபோல் என் இடத்தில் தென்னை மரத்தை பிடுங்கவில்லை, எதிரி அவரது இடத்திலிருந்த தென்னை மரத்தைதான் பிடுங்கினார், அதை மறைத்து பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த தென்னை மரம் எனது இடத்தில் வருகிறது என்பதற்காக அத்துமால் சர்வேயருக்கு பணம் கட்டி அளந்தேனா என்றால் அளந்துள்ளேன். அவ்வாறு எந்த அளவை பணியும் செய்யவில்லை, அவ்வாறு அளந்திருந்தால் அத்துமாலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது வயலிலில் தென்னை மரத்தை பிடுங்கிய பின்னர் எதிரி எந்த திசையில் சென்றார் என்றால் கிழக்குபக்கம் சென்றார்கள். இதுவரை அந்த JCB மற்றும் அதன் ஒட்டுனரைபற்றி விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். அதன்பின்னர் என்ன நடந்தது என்றால் பிரச்சனை ஏற்பட்டு போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றேன், காயம் இருந்ததால் மருத்துவமனைக்கு சென்றேன். நான் போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றபோது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 09.00 மணி

இருக்கும் என்றால், எந்த தேதியில் சென்றேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை, 31.03.2018 ம் தேதி போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றேன் என்றால் சரிதான்.

6) போலீஸ் ஸ்டேசனில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். புகாரை காவல் நிலையத்தில் வைத்து எழுதினேனா, அல்லது புகார் எழுதி கொண்டு காவல் நிலையம் சென்றேனா என்றால் காவல் நிலையத்தில் வைத்துதான் புகார் எழுதினேன். காவல் நிலையத்திற்கு எனது XL இருசக்கர வாகனத்தில் சென்றேனா என்றால் ஆட்டோவில் சென்றேன். அந்த ஆட்டோ எங்கிருந்து என்னை ஏற்றி கொண்டு வந்தது என்றால் எனக்கு அடிபட்ட கண்மாயிலிருந்து என்னை ஏற்றி கொண்டு வந்தார்கள். அந்த ஆட்டோவில் யார் யார் வந்தோம் என்றால் நான், எனது மனைவி, எனது மகன் சென்றோம், நான் ஆட்டோவில் செல்லவில்லை, அந்த கண்மாய்க்கு போக்கு ஆட்டோ செல்வதற்கு வழி இல்லை என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பின் போலீசார் என்ன செய்தார்கள் என்றால் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, எவ்வளவு நேரம் காவல் நிலையத்தில் இருந்தோம் என்றால் காயத்தை பார்த்து மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அதே ஆட்டோவில்தான் கீழவளவு காவல் நிலையத்திலிருந்து மேலுருக்கு வந்தோம் என்றால் சரிதான். கீழவளவிற்கு காவல் நிலையத்திலிருந்து மேலூர் அரசு மருத்துவமனைக்கு 15 கிமீ இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு மருத்துவமனைக்கு வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 10.00 மணி இருக்கும்

7) இந்த வழக்கில் சாட்சியாக போடப்பட்டுள்ள பாண்டி அம்பலம் என்பவர்தான் பதினெட்டாங்குடி அம்பலத்தார் என்றால் சரிதான். பாண்டி அம்பலம் என்பவர் எனக்கு வேண்டியவர் என்றால் சரிதான். சாட்சி

பட்டியலில் 5வது சாட்சி சாந்தி என்பவர் பாண்டி அம்பலத்தின் மனைவி என்றால் சரியல்ல. அந்த பாண்டி அம்பலத்தாருக்கு சம்பவ கால கட்டத்தில் எனது வயலுக்கு அருகே அவருக்கு வயல் இருந்ததா என்றால் இருந்தது. நான் மருத்துவமனையில் சிகிச்சை முடித்து என்ன செய்தேன் என்றால் கீழவளவு காவல் நிலையம் சென்றேன். அங்கு என்ன நடந்தது என்றால் மாயக்கண்ணன் அம்பலம், சந்திரசேகர், அங்கிருந்த இன்னும் சில நபர்கள் வெள்ளைதாளில் கையொப்பம் வாங்கிகொண்டு புகாரை திரும்ப பெற சொன்னார்கள். அப்போது எதிரியும் நானும் சமரசமாக வேண்டுமென்றும், வாய்க்கால் சம்மந்தமாக வேறு பிரச்சனை செய்ய வேண்டாம் என்று எனது மச்சான் கண்ணன், செல்வராஜ், கோட்டநத்தம்பட்டி ஊராட்சி தலைவர் கந்தப்பன் ஆகியோர் முன்னிலையில் சமரசம் நடந்தது என்று சரிதான். அந்த பஞ்சாயத்தில் எதிரிக்கு, எனக்கும் வேறு பிரச்சனை ஏற்பட்டால் ஊராட்சி தலைவர் கந்தப்பன் முன்னிலையில் பேசி முடித்துகொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8) அன்றையதினம் மேலூர் கோதாண்டராமனிடம் பத்திரத்தை வாங்கி கொண்டு சென்று எதிரிகள், பஞ்சாயத்தினர் கையொப்பம் செய்து சமரசம் பேசிக்கொண்டோம் என்றால் நான் பத்திரத்தை வாங்கவில்லை, கையொப்பம் செய்ய சொன்னார்கள் செய்தேன். மேலூரில் Stamp vendor யிடம் என் பெயரில் ஸ்டாம்ப் வாங்கினேன் என்றால் தெரியவில்லை.

**( எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை தொடச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது ).**